RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2223

OPEN ACCESS

# சிவகங்கை மாவட்டம் பெரியகோட்டை கிராமத்தில் நடைபெறும் புரவிளடுப்பு விழாவில் கிராமதேவதையும் எல்லை தெய்வமும்

ம. விமலாராணி [அ, *], மா. ரெத்தினேஸ்வரி [அ]

[அ] தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை-630303, தமிழ்நாடு, இந்தியா

# Sivaganga District, Manamadurai, Tiruppuvanam Union Village Deity, and Deity of the Border

M. Vimalarani [a, *], M. Rethineswari [a]

[a] Department of Tamil, Sree Sevugan Annamalai College, Devakottai-630303, Tamil Nadu, India

* Corresponding Author: vimalkeerthi17@gmail.com

Received: 28.09.2022
Revised: 23-10-2022
Accepted: 02-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

There are seven villages under the Manamadurai and Thiruppuvanam Unions in the Sivaganga district. They are Periakottai, Thekkur, Semakottai, Kanoor, Kalloorani, Anniyendhal, and Sirugudi, respectively. In all seven villages, the village deity is the female deity, and the deity of the border who protects the town is Ayyanar Swami and blesses the devotees. The worship of the village deity is a festival held annually in all seven villages. Since the worship of the Horse festival for Ayyanar Swamy is a grand festival, the expenses are calculated and are held once every four to five years. Thus, the worship of the Horse Festival in Periyakottai village has been a worship of the village deity and the deities of the border since time immemorial. The Amphora event taken for the village deity is observed as a very promising event. Moreover, in this festival, the art of drama takes precedence over the mythological plays of Sankaradhasar Swami. Bangles, toys, and mixed shops are opened as people gather in large numbers for the celebration. Thus, the contribution of small-scale industries to grow and the benefits of it can be realized through this festival. The festival, which is held jointly by seven villages, promotes religious harmony.

**Keywords:** Manamadurai, Tiruppuvanam Union Village Deity, Deity of the Border

## முன்னுரை

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் பெரியகோட்டை கிராமத்தில் நடைபெறும் புரவிளடுப்பு விழாவில் கிராமதேவதையும் எல்லை தெய்வமும் எவ்வாறு சிறப்பிக்கப் பெறுகின்றன என்பதையும் இந்து சமயத்தின் பல்வேறு இன வகுப்புகளைச் சார்ந்த மக்கள் விழா எடுப்பதால் ஏற்படும் சுமூக உறவும் நல்லிணக்கமும் நிகழ்வதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புதுக்கோட்டை மாவட்டம் கம்பன்காடு பெரியகோட்டையிலிருந்து புலம் பெயர்ந்த வெள்ளாள இனத்தைச் சார்ந்த மக்கள் சிவகங்கை மாவட்டம் பெரியகோட்டை, தெக்கூர், சேமணங்கோட்டை, கானூர், கல்லூரணி, சிறுகுடி, அன்னியேந்தல், போன்ற ஏழூர்களில் வசித்து வருகின்றனர். இன்றளவும் ஏழூர்களும் எல்லாச் சடங்கு சம்பிரதாயங்களிலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகவே இருந்து வருகின்றன. இவற்றுள் பெரியகோட்டை கிராமமே ஏழூர்களுக்கும் தாய் கிராமமாக விளங்கி வருகிறது.

## கிராமதேவதை: உலகுடைய அம்மன்

பெரிய கோட்டை கிராமத்தின் கிராமதேவதையாக அருள்பாலிப்பது அருள்மிகு உலகுடைய அம்மன் திருக்கோயிலாகும். உலகுடைய அம்மன் திருக்கோயில் பெரியகோட்டையின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. கோயில் ஊரைப் பார்த்தவாறு வடக்கு நோக்கி அமைந்துள்ளது. பெரியகோட்டை கிராமத்தில் வாழும் அனைத்து இனத்தவருக்கும் பொதுவான தெய்வமாகவே அருளாசி வழங்குகிறாள் உலகுடைய அம்மன்.

ஒவ்வொரு ஊருக்கும் என ஒரு கிராமதேவதை உண்டு. கிராமதேவதைகள் பெரும்பாலும் பெண் தெய்வங்களாகவே அமைந்திருக்கின்றன. உலகுடைய அம்மன் கோயிலானது நானூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்கிறார் கோயில் பூசாரியான தெய்வத்திரு. கிருஷ்ணன் பண்டாரம் அவர்களின் மகன் பாலா அவர்கள். பாலா அவர்களின் வகையறாக்கள் வழிவழியாக உலகுடைய அம்மன் கோயிலுக்குப் பூசை செய்து வருகின்றனர்.

## எல்லை தெய்வம்: சிங்கம்புணரி சேவுகப்பெருமாள்

பெரியகோட்டை கிராமத்தின் எல்லைதெய்வமான ஊரைக்காக்கும் தெய்வமாகக் கருதப்படும் பூரணவல்லி, புஷ்கலாதேவி சமேத சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் ஐயனார் திருக்கோயில் பெரியகோட்டையில் ஓடும் சிலம்பாற்றின் மறுகரையில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சிங்கம்புணரி என்ற ஊரில் இருந்து பிடிமண் எடுத்து வந்து கட்டடப்பட்டதால் சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் ஐயனார் கோயில் என்றே அழைக்கப்பெறுகிறது.

“ஐயனாருக்குப் பூர்ணாதேவி, புஷ்கலாதேவி என இரண்டு தேவியர் உள்ளனர். ஐயனார் தேவலோகத்தைச் சேர்ந்தவர் பூலோகத்தில் அவதரித்தவர். எனவே தேவலோகத்தைச் சேர்ந்த புஷ்கலாதேவியும் பூலோகத்தைச் சேர்ந்த பூர்ணாதேவியும் துணைவியராக உள்ளனர்” (Kalairasan, 2012)

சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் திருக்கோயில் பெரியகோட்டை கிராமத்தைச் சுற்றியிருக்கும் ஏழரை கிராமங்களுக்குச் சொந்தமானது. அவை முறையே பெரியகோட்டை, முத்தரசன், மாங்குடி, வானக்கருப்பு, தெற்குவாடி கிடாப்புரி, ஆண்டியேந்தல், காளிக்காடு (அரைக்கிராமம்) ஆகிய கிராமங்களாகும். இத்திருக்கோயில் நானூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்கிறார் கோயிலில் பூசைசெய்யும் சின்னையா வேளார் அவர்கள். இவர்களின் வகையறாக்கள் முறைப்படி ஆண்டிற்கு ஒருவராக கோயிலுக்குப் பூசை செய்து வருகின்றனர்.

## வழிபாடுகள் நித்தபூசை

உலகுடைய அம்மன் திருக்கோயிலில் நித்தபூசை நடைபெறுகிறது. நித்த பூசைக்கென்று கிராமம் சார்பாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் ஐயனார் கோயிலில் நித்த பூசை நடைபெறுகிறது. நித்த பூசைக்கென்ற பெரியகோட்டை கிராமத்தில் வாழும் நகரத்தார் சார்பாக நிதமும் தினப்படி வழங்கப்படுகிறது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. பக்தர்கள் வேண்டுதலின் பொருட்டு பொங்கல் வைப்பதற்குத் தனியாகப் பொருள்களும் கொடுக்கின்றனர்.

## விழாக்கள்

### புரவி எடுப்புவிழா

புரவி எடுப்புவிழா சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் ஐயனார் கோயிலுக்கே உரிய பெரும்விழா என்றாலும் உலகுடைய அம்மன் கோயிலுக்குத் தொடர்புடையதாகவும் உள்ளது.

"நீர்நிலைக் காவல் தெய்வம் ஐயனார் என்பதால் புரவி எடுப்பில் ஒரு நிகழ்வாக இவ் ஐயனார் கோயிலில் இச்சடங்கு நிகழ்த்தப்படுகிறது" (Kalairasan, 2012).

## கிராமக் கூட்டம்

புரவி எடுப்புவிழா தொடங்குவதற்கு முன் ஏழரைக் கிராமத்தின் சார்பாக பெரியகோட்டையில் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் புரவி எடுப்பு விழாவிற்கு எப்பொழுது பிடிமண் கொடுப்பது அதிலிருந்து விழா எப்பொழுது நடைபெறுவது என்பது பற்றி முடிவு செய்யப்படுகிறது. விழாவானது மூன்று நாட்கள் நிகழ்வாக உள்ளது. திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் நடைபெறுவதாக முடிவு செய்யப்படுகிறது.

விழாவிற்கு எவ்வளவு செலவாகும் என்பது பற்றி தீர்மானிக்கப்படுகிறது. அதன்பினபு ஒவ்வொரு கிராமத்திற்கும் எவ்வளவு செலவாகும் என்பது பிரித்துக் கூறப்படுகிறது. ஒவ்வொரு கிராமமும் தங்களுக்கென கூறப்பட்ட தொகையைப் பொறுத்து குடிவரி வைக்கின்றனர். ஒவ்வொரு கிராமமும் முறைப்படி வரிவசூல் செய்து பெரியகோட்டை கிராமத்தில் மொத்தமாக வழங்குகிறார்கள்.

பெரியகோட்டை கிராமத்தில் வசித்து வரும் வெள்ளாள இனப் பெருமக்களின் பதினான்கு கரைகாரர்களில் புரவி எடுப்பு விழா நடைபெறும் ஆண்டில் வரவு, செலவு கணக்கு பார்த்து வரும் கரைகாரர்கள் வரி வசூல் செய்கின்றனர்.

## பிடிமண் கொடுத்தல்

புரவி எடுப்புவிழா தொடங்குவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே பிடிமண் கொடுத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஏழரை கிராம நிர்வாகிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே தட்டில் தேங்காய், வாழைப்பழம் வைத்து ஐயனார் கோயில் சென்று வணங்குகின்றனர்.

கோயிலில் விழாத்தலைவர் அவர்கள் ஏழரை கிராமங்கள் சார்பாக மண் எடுத்து கோயில் பூசாரி கையில் கொடுக்கிறார். இதுவே பிடிமண் கொடுத்தல். இந்நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமையன்று நடைபெறுகிறது. பிடிமண் கொடுத்த நாளில் இருந்து மாலை ஆறு மணி அளவில் தெற்குத் தெருக்காரர்கள் தெற்குத் தெருவில் இருந்து பெரியகோட்டை கிராமத்தின் கோட்டை எனப்படும் இடம் வரை குலவை ஒலியுடனும் மேளதாளங்களுடனும் வந்து திரும்புகின்றனர்.

## சுள்ளாங்கரை

சுள்ளாங்கரை என்பது வேளார் வீட்டின் முன் அவர்கள் செய்யும் மண்ணாலான குதிரைகள், மண்ணாலான காளைகள், மண்ணாலான சிலைகள் சுடும் இடம் ஆகும். பிடிமண் கொடுத்தவுடன் பூசாரி அவர்கள் தங்கள் உறவினர்களைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து வருகின்றனர். அனைவரும் சேர்ந்து பூசாரி வீட்டின் முன்னால் மண்சிலைகள் செய்யத் தொடங்குகின்றனர்.

## மண்சிலைகள்

சாமிசிலைகள், விநயாகர், கருப்பணசாமி, நொண்டிச்சமையணசாமி நாகர், குதிரை சிலைகள் (பத்துக்குதிரைகள்) ஒன்று அரண்மனைக் குதிரை அல்லது ராஜா குதிரை எனப்படுகிறது. குதிரையின் மேல் ஐயனார் உட்கார்ந்திருப்பதே அரண்மனைக்குதிரை எனப்படுகிறது. மற்றவை ஒன்பது குதிரைகள் சாதாரணமானவை.

"புரவி எடுத்தல் என்ற ஐயனார் கோயிலில் உள்ள சேமங்குதிரைகளைப் போலச் சிறிய மண் குதிரைகளைச் செய்து மக்கள் அனைவரும் திருவிழா அன்று அவற்றை எடுத்துச் சென்று கோயிலில் சேர்ப்பர். சிலர் நேர்த்திக் கடனாகவும் செய்கின்றனர்" (Kalairasan, 2012).

## காளைமாடு

நாச்சாங்கன்று என்று சொல்லப்படுகிற காளைமாடுகள் இரண்டு. இவைதவிர மக்கள் தங்கள் வேண்டுதலின் பொருட்டு தங்கள் பொருட்செலவில் செய்வதற்கென்று பைரவசாமி சிலைகள், குழந்தை சிலைகள், பாம்புசிலைகள், இவைகள் அளவில் சிறியதாக இருக்கும். இவை அனைத்தும் பூசாரியின் வீட்டின் முன் செய்து சுள்ளாங்கரையில் சுட்டு வர்ணம் தீட்டப்படுகிறது.

## விழாத்தொடக்கம்

உலகுடைய அம்மன் கோயிலின் முன்புறம் மற்றும் இடது சுற்றுச்சுவர் ஒட்டிய வெளிப்பகுதிகளில் பந்தல் போடப்படுகிறது பந்தல் நாடகமேடையைப் பார்த்தவாறு அமைக்கப்படுகிறது.

## மாத்து விரித்தல்

மாத்து என்பது தூய்மையான வெள்ளைத்துணி ஆகும். மாத்து கொட்டகையின் கீழ் விரிக்கப்படுவது. இதனை பெரியகோட்டையைச் சார்ந்த சலவைத்தொழிலாளர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் செய்கிறார்கள். கொட்டகையின் உள், மேற்புறத்திலும் மாத்துக் கட்டுகிறார்கள்.

## திங்கள்கிழமை: முதல்நாள்

விழாவின் முதல்நாள் திங்கள்கிழமையன்று சுள்ளாங்கரையிலிருந்து நாகர் சிலை மட்டும் பூசாரியால் தலையில் வைத்து தூக்கிவரப்பட்டு கொட்டகையின் தொடக்கத்தில் மாத்து விரிப்பின்மேல் வைக்கப்படுகிறது.

நாகர் சிலை அடியில் ஏழரை கிராம மக்கள் தங்கள் வேண்டுதலின் பொருட்டு ஓலைப்பெட்டியில் நெல்கொண்டு வந்து கொட்டுகின்றனர். மக்கள் கொட்டும் நெல், மாத்து விவரிக்கும் சலவைத் தொழிலாளர் குடும்பத்தைச் சாரும்.

## செவ்வாய்க்கிழமை: இரண்டாம் நாள்

மறுநாள் செவ்வாய்க்கிழமை மூன்றுமணியளவில் உலகுடைய அம்மன் கோயில் பூசாரி வீட்டுப்பெண்கள் மற்றும் அவரது பங்காளிகள் வீட்டு உறவுப்பெண்கள் இருபத்து மூவர் பால்குடம், மஞ்சள் நீர்குடம், பானாக்கம் நிரம்பிய குடம் (புளி, வெல்லம், வரமிளகாய், ஏலக்காய் கலந்த நீர்), மதுக்குடம் போன்ற குடங்கள் எடுக்கிறார்கள்.

## மதுக்குடம் தயாரித்தல்

பெரியகோட்டை கிராமத்திலிருந்து கிராமம் சார்பாக புரவிஎடுப்பு விழாவிற்கு ஒரு வாரத்திற்கு முன் இரண்டு மூட்டை நெல் வாங்கி உலகுடைய அம்மன் கோயில் பூசாரி வீட்டில் கொடுக்கிறார்கள். பெரியகோட்டையில் உலகுடைய அம்மன் கோயிலுக்கென்று சாமிவீடு உள்ளது. பூசாரியும் அவரைச் சார்ந்தவர்களும் சாமி வீட்டில் நெல்லைப் பக்குவமாக ஊறவைக்கிறார்கள். ஊறிய நெல்லை முளைக்கட்டி வைக்கிறார்கள். இரண்டு நாள்களில் முளைப்பு வந்தவுடன் முளைக்கட்டிய நெல்லை உரலில் இட்டு இடிக்கிறார்கள். இடித்ததில் இருந்து கிடைக்கும் தெளிந்த நீரை மது என்கின்றனர். இவ்வாறு தயாரித்த மதுவை இருபது மண்கலயங்களில் நிரப்புகின்றனர். நிரப்பிய மதுக்குடத்தின் மீது விரியாத தென்னப்பூ இடுகின்றனர்.

மதுக்குடம் எடுப்பதற்கு முன் உலகுடைய அம்மன் கோயிலில் பூசை செய்து வழிபாடு முடித்தபின் சாமி வீடு சென்று சூல் ஆடு பலிகொடுத்து வழிபாடு முடித்தபின் மதுக்குடங்கள் எடுக்கிறார்கள்.

மதுக்குடங்களை இருபது பெண்கள் சுருமாடு வைத்து தலையில் தூக்குகின்றனர். இவர்களுக்கு முன் கிருஷ்ணன் பூசாரி அவர்களின் மனைவி பாப்பாள் அம்மாள் பால்குடம் எடுக்க, மஞ்சள் நீர்க்குடம் எடுப்பவர், பானாக்கம் குடம் எடுப்பவர் முன் செல்கின்றனர், இவர்கள் மந்தையம்மன் கோயில் வரை சென்று சுற்றி வருகின்றனர்.

மதுக்குடம் எடுத்துச் செல்லும்போது மதுக்குடம் எடுத்து வருபவர்கள் நடப்பதற்கும் மாத்து கீழே மாறி மாறி விரிக்கப்படுகிறது. மதுக்குடத்தின் மேலேயும் மாத்து மாறி மாறிப் பிடிக்கிறார்கள். மாத்து விரிப்பதும் பிடிப்பதும் பெரியகோட்டை கிராமத்தின் சலவைத்தொழிலாளர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் (மாத்து என்பது சலவை செய்த வெள்ளை வேட்டி).

## குட்டி வெட்டுதல்

மதுக்குடம் சாமி வீட்டிலிருந்து மந்தையம்மன் கோயில் சுற்றி உலகுடைய அம்மன் கோயில் வரும் வரை தெருவின் ஒவ்வொரு முனையிலும் ஒரு ஆட்டுக் கிடாய் பலி கொடுக்கிறார்கள். மொத்தம் பதினாறு ஆட்டுக் கிடாய்கள் பலி கொடுக்கிறார்கள். இதுவே குட்டி வெட்டுதல் எனப்படுகிறது. ஆட்டுக் கிடாய் கொடுப்பவர்கள் கோனார் வகுப்பைச் சார்ந்தவர்கள்.

ஆட்டுக்குட்டி வெட்டுவதை அந்தந்த தெருவில் உள்ள கரைகாரர்கள் பிரித்து எடுத்துக்கொள்கிறார்கள். குட்டி வெட்டுவது பெரியகோட்டையைச் சார்ந்த தச்சர், வேலை செய்பவர்கள். கொல்லர் ஆசாரி பலகை பிடிக்க, தச்சர் ஆசாரி குட்டி வெட்டுகிறார். பதினாறு குட்டிகளின் தலைகளும் கால்களும் கொல்லர் ஆசாரி, தச்சர் ஆசாரி ஆகிய இருவரையும் சார்ந்தது. பதினான்கு கரைகாரர்களுக்குப் போக மீதம் உள்ள இரண்டு குட்டிகள் பூசாரி வீட்டை சார்ந்தது.

மதுக்குடம் சுற்றி வந்து உலகுடைய அம்மன் கோயிலில் கொண்டு சென்று அனைத்து குடங்களும் இறக்கி வைக்கப்படுகிறது. கோயிலில் பூசை செய்து ஒரு ஆடடுக் கிடாய் பலி கொடுக்கப்படுகிறது. கோயில் பூசாரி அவர்கள் பானாக்கக் குடம், பதினான்கு மதுக்குடங்களை பதினான்கு கரைகாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார். அவர்கள் மதுக்குடத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று குடத்தில் உள்ள மதுவை தங்கள் உறவினர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள்.

மதுக்குடம் இறக்கியபின் உலகுடைய அம்மன் கோயிலில் நடைபெறும் வழிபாட்டில் குட்டி கொடுக்கும் (ஆட்டுக்கிடாய்) கோனார் வகுப்பைச் சார்ந்தவர்கள், குட்டி வெட்டும் ஆசாரி வகுப்பைச் சார்ந்தவர்கள், பெரியகோட்டை கிராம ஊர்க்காவல்காரர்கள், மாத்து விரிக்கும் வண்ணார் இனத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்கு மரியாதை செய்யப்படுகிறது. திருவிழாவின்போது ஆட்டுக் கிடாய்கள் வழங்குவதற்காகக் கோனார் வகுப்பைச் சார்ந்தவர்களுக்குப் பெரியகோட்டை கிராமம் சார்பாக "கிடாவிருத்தி" என்ற நிலம் கொடுக்கப்பட்டுள்ளது.

கோயிலில் வழிபாடு முடிந்து அனைவரும் வெளியில் சென்றபின் கோயிலின் சுற்றுச்சுவர் கதவைப் பூட்டிவிட்டு வழிபாடு செய்து ஒரு ஆட்டுக் கிடாய் பலி கொடுப்பதாகக் கூறுகிறார் பூசாரி பாலா அவர்கள்.

மதுக்குடம் எடுத்து முடித்தபிறகு மக்கள் அனைவரும் சுள்ளாங்கரை செல்கின்றனர். பூசாரி சுள்ளாங்கரையில் பூசைசெய்து முடித்தவுடன் சுள்ளாங்கரை முனியனுக்கு ஒரு ஆட்டுக் கிடாய் பலியிடப்படுகிறது.

அதன்பின் கருப்பணசாமி. நொண்டிச்சாமி சமையணசாமி, விநாயகர் சிலைகளை பூசாரியும் பூசாரியின் பங்காளிகளும் தலையில் வைத்து தூக்கி வருகின்றனர்.

குதிரைகளில் அரண்மனைக்குதிரை, பெரியகோட்டை கிராமத்திற்கு உரியது. மற்ற கிராமத்தைச் சார்ந்தவர்களும் தங்கள் குதிரையை நான்கு கால்களுக்கும் கம்பு சேர்த்து கட்டித் தோளில் வைத்துத் தூக்கி வருகின்றனர். "வழிபாடு தனி வழிபாடாகவும் கூட்டு வழிபாடாகவும் பண்டை காலம் தொட்டு நடத்தப்பட்டு வந்துள்ளது. இவற்றுள் கூட்டு வழிபாடு சமுதாய ஒற்றுமைக்கு வழி வகுக்கும் தன்மைத்தது" (Sutha, 2019).

## பூமரக்கால்

ஏழரை கிராமங்களுக்கும் பொதுவாக பெரியகோட்டை கிராமத்தைச் சார்ந்த தெற்குத் தெருக்காரார்கள் பூமரக்கால் எடுத்து வருகின்றனர். பூமரக்காலில் நெல்இட்டு அதில் தென்னம் பூவை சொருகி தலையில் வைத்துக் கொண்டு வருகின்றனர்.

“இவ்வூர்க்காரர்கள் குடிநீர், இல்லப்புழக்கம், வேளாண்மை கால்நடைகள் போன்றவற்றிற்கு நீரின் இன்றியமையாமையை உணர்ந்து மழை வேண்டிச் செய்யும் வளமைச் சடங்குகளில் ஒன்று பூமரக்கால் தூக்குதல் என்னும் சடங்காகும்” (Kalairasan, 2012). வடக்குத் தெருக்காரர்கள் சார்பாக ஒரு வெள்ளைக் குடையும் பெரியகோட்டை கிராமம் சார்பாக சாமி குடை ஒன்றும் எடுத்து வரப்படுகிறது. மரக்கால், குடைகள் எல்லாம் சாமி சிலைகள், குதிரைகளுக்கு முன்னால் எடுத்துச் செல்கிறார்கள். குதிரைக்குப்பின் மக்கள் தங்கள் வேண்டுதலின் பொருட்டு நாகர், குழந்தை, காளை, பைரவர் உருவங்களை எடுத்து வருகின்றனர்.

அனைத்து சிலைகளும் கொட்டகையில் கொண்டுவந்து வரிசையாக நாடகமேடையைப் பார்த்தவாறு வைக்கப்படுகிறது. அனைத்து சிலைகளின் அடியிலும் மக்கள் நெல் கொட்டுகின்றனர். வழிபாடு முடிந்தபின் பெரியகோட்டையில் உள்ள தெற்குத் தெருவைச் சார்ந்தவர்கள் வடம் பிடித்து வந்து உலகுடைய அம்மனை வழிபாடு செய்துவிட்டு அவர்களின் சமயணசாமி கோயிலில் கொண்டு சென்று வழிபாடு செய்கின்றனர். (வடம் என்பது வைக்கோல் நிறைய சேர்த்து கயிறு போல பின்னுகின்றனர். வடமானது மூன்று மீட்டர் நீள அளவு உடையது).

## குதிரை கூத்துப் பார்த்தல்

செவ்வாய்க்கிழமையன்று பெரியகோட்டை கிராமத்தில் தவறாமல் நாடகம் நிகழ்த்தப் பெறுகிறது. பெரும்பாலும் சங்கரதாசு சுவாமிகளின் புராண நாடகமான வள்ளிதிருமண நாடகமே நிகழ்த்தப் பெறுகிறது. குதிரைகள் அனைத்தும் நாடகமேடையைப் பார்த்தவாறு இருப்பதால் இதனை குதிரை கூத்துப் பார்க்கின்றது என்கிறனர். நாடகம் பார்ப்பதற்கென்று பக்கத்து கிராமங்களில் இருந்து மக்கள் வருகின்றனர். நாடகம் இரவு ஒன்பது மணி அளவில் தொடங்கி காலை ஆறு மணி வரை நடைபெறுகிறது. “கிராம தெய்வங்களுக்கு வழிபாடுகள் மற்றும் கலைகள் நிகழ்த்துவதன் மூலமாக கிராம மக்களிடையே ஒற்றுமை நிலவுகிறது. கிராமங்களில் சாதி, பொருளாதாரம், அரசியல், மதுபானங்கள் போன்றவற்றால் கிராம மக்களிடையே வேற்றுமை ஏற்பட்டாலும் திருக்கோயில்களால் ஒற்றுமை நிலவுகிறது” (Suresh, 2019). திருவிழாவின்போது மக்கள் திரளாக வருவதால் திடீர் கடைகளும் உருவாகின்றன. பொம்மை, வளையல், தின்பண்டங்கள், தேனீர் விற்பனை செய்யும் கடைகளை சிறு தொழில் செய்யும் மக்கள் அமைக்கின்றனர். நாடகம் நடைபெறுவதால் இரவு முழுவதும் கடைகள் செயல்படுகின்றன.

## புதன்கிழமை

புதன்கிழமை மாலை அனைத்து சிலைகளும் எடுப்பதற்கு முன்பாக ஒரு ஆட்டுக் கிடாய் பலி கொடுக்கப்படுகிறது. அனைத்து சிலைகளும் சிலம்பாற்றின் கரைமுன் வடம் வரும் வரை நிற்கின்றனர். வடம்பிடிப்பவர்கள் வழிபாடு செய்து வடம் எடுத்து வந்து சிலம்பாற்றின் கரை முன் வருகின்றனர். மேளதாளங்கள் முழங்க வானவேடிக்கையுடன் வடமானது கோயிலை நோக்கிச் செல்கிறது. வடம் பிடித்து செல்வதற்குப் பின் குடைகள், பூமரக்கால், சாமி சிலைகள், குதிரைகள். காளைகள், சிறிய சிலைகள் அனைத்தையும் தூக்கிச் செல்கின்றனர். சிலம்பாற்றின் அருகில் சென்றவுடன் அங்கு ஒரு சூல் ஆடு பலிகொடுத்து புதைக்கப்படுகிறது.

## பச்சமுடைய ஐயனார் கோயில்

ஒரு குதிரை, ஒருகாளைமாடு. இரண்டும் பெரியகோட்டையில் உள்ள பச்சமுடைய ஐயனார் கோயிலுக்குக் கொண்டு சென்று இறக்கப்படுகிறது. குதிரை, காளை சிலைகளை இறக்கியவுடன் கோயிலில் பூசை செய்து அங்கு ஒரு ஆட்டுக் கிடாய் பலி கொடுக்கப்படுகிறது.

### கருப்பணன் கோயில்

பெரியகோட்டையில் உள்ள கருப்பணன் கோயிலுக்கும் ஒரு குதிரை கொண்டு சென்று இறக்கி வைத்து வழிபாடு செய்கிறார்கள். மற்ற குதிரைகள், சாமி சிலைகள், சிறிய உருவங்கள், அனைத்தும சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் கோயிலுக்குக் கொண்டு சென்று இறக்கி வைக்கிறார்கள். சிலைகள் இறக்கி வைப்பதற்கு முன் வடம் பிடிப்பவர்கள் கோயிலை மூன்று சுற்று சுற்றி வந்து வழிபாடு செய்தபின்னரே கோயிலின் தென்கிழக்கு மூலையில் அனைத்து சிலைகளும் இறக்கி வைக்கப்பட்டு கோயிலில் பூசை நடைபெறுகிறது.

கோயிலில் ஏழரை கிராமங்களுக்கும் முறைப்படி மரியாதை செய்து காளாஞ்சி (ஒரு தேங்காய் மூடி, ஒரு வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, திருநீறு குங்குமம்) வழங்குகிறார் கோயில் பூசாரி அவர்கள். பெரியகோட்டை கிராம தெற்குத் தெரு, வடக்குத் தெருவைச் சார்ந்தவர்களுக்கும் கோயிலில் மரியாதை செய்கிறார் பூசாரி. பூசை முடிந்தவுடன் ஒவ்வொரு கிராமத்தினரும் தனித்தனியாக ஆடடுக் கிடாய் வெட்டுகின்றனர். வெட்டிய ஆட்டுக் கிடாயின் இரண்டு தொடைப் பகுதிகளையும் அவர்கள் எடுத்துக்கொண்டு மற்ற பாகங்களைப் பூசாரியிடம் கொடுத்து விடுகின்றனர்.

ஐயனார் கோயிலில் வழிபாடு முடிந்த பின் பெரியகோட்டையில் உள்ள அருள்மிகு உலகுடைய அம்மன் கோயிலிலும் பூசை செய்து ஆட்டுக் கிடாய் ஒன்று பலி கொடுக்கப்படுகிறது. விழா இவ்வாறு மூன்று நாட்களும் தொடர்ச்சியாக நடைபெற்று இனிதே முடிவடைகிறது. இவ்விழா பெரியகோட்டை மற்றும் சுற்றி உள்ள ஊர்களில் வாழும் அனைத்து இன மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் பெரும் விழா என்று பெருமிதத்துடன் கூறுகிறார் சமூக சேவகர் மா. முத்துகணேசன் அவர்கள்.

### நம்பிக்கை

புரவி எடுப்புவிழா கொண்டாடுவதால் நல்ல மழைபெய்து கிராமங்கள் செழிப்பாக இருக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். குழந்தை சிலை எடுத்து வைத்தால் குழந்தை வரம் கிட்டும் என்றும் மாடு சிலைகள் எடுத்து வைப்பதால் பட்டி பெருகும் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது என்கிறார் ஜீ. நந்தகோபால் அவர்கள்.

## முடிவுரை

கிராமதேவதையும் எல்லை தெய்வமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக பெரியகோட்டை கிராமத்தில் தொன்றுத் தொட்டு இருந்து வருவதாக உள்ளது. மேலும், பெரியகோட்டையில் நடைபெறும் புரவி எடுப்பு விழாவில் பெரியகோட்டை கிராமம் மட்டுமல்லாது அதனைச் சுற்றியுள்ள ஏழரை கிராமங்களும் ஒன்றிணைந்து செயல்படுவது கிராமங்களின் நல்லிணக்கத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## References

Kalairasan, K. (2012) Aiyanara or Iyanara, Thirukovil Kuladeiva Marabukal Nanneerattu Vila Malar, Lakshmi Printers, Karaikudi, India.

Suresh, S. (2019) Ponloi Grama Thirukovilkalum Samuga Otrumaium, Ed. Pandi et al., Samuka Nallinakkattirkut Tirukkoyilkalin Pankalippu, Pg no. 73-77, Alagappa University, Karaikudi, India

Sutha, M. (2019) Ponloi Grama Thirukovilkalum Samuga Otrumaium, Ed. Pandi et al., Samuka Nallinakkattirkut Tirukkoyilkalin Pankalippu, Pg no. 62-72, Alagappa University, Karaikudi, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License